Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
| --- | --- |

வேணு : 17 அக்டோபர் 2011 கானம் : 3



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083, and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.namadwaar.org
Email:contact@namadwaar.org


ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

ரூ.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




வேணு : 17 | அக்டோபர் 2011 | கானம் : 3

Delivered by India Post www.indiapost.gov.in













ஆகஸ்டு 27 - நிருத்யோத்ஸவம்
குமாரி ஸ்வேதாகல்யாண் - மதுரபுரி
ஆஸ்ரமம் - கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்



ஆகஸ்ட் 29 - தெப்போத்ஸவம் - மதுரபுரி ஆஸ்ரமம்
- கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்





செப்டம்பர் 24 மலேசியா - ரவாங் - கிருஷ்ணர் கோவிலில் மஹாமந்திர கீர்த்தனையுடன் கூடிய சத்சங்கம்



செப்டம்பர் 3 பெங்களூரில் "புரந்தரா" பள்ளி மாணவர்களுக்கான போட்டி பாரதீய வித்யா பவன் ஆடிட்டோரியம்





ஆகஸ்டு 22 - ஜானவாஸம் - மதுராபுரி ஆஸ்ரமம் - கிருஷ்ண ஜெயந்தி உத்ஸவம்



செப்டம்பர் 16 - கோவைப்புதூர் [illegible] மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 17 அக்டோபர் 2011 கானம் : 3

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 187 | 03 | வாசனைகளை தடுக்க உபாயம் | 14 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 05 | நாகம் என்னவோ பொய்தான்! | 16 |
| பாகவத பழம் -19 | 07 | ஞானம் ஏன் வரவில்லை? | 25 |
| உலகம் சரியாக இருக்கிறது | 21 | மாலே மணிவண்ணா | 32 |
| ப்ருந்தாவன கண்ணன் | 29 | அப்பாலுக்கு அப்பால் | 34 |

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

நண்பர்களில் சிலர், நட்பின் காரணமாக, நம்மிடமுள்ள குறைகளைக் கண்டறிவதில்லை. வேறு சிலர், தாங்கள் அடையக்கூடிய லாபத்தின் காரணமாக, இனிய சொற்களையே பேசுகின்றனர். இன்னும் சிலர், தங்களுக்கு எது பிடிக்குமோ, அது மற்றவர்களுக்கும் பிடிக்கும் என்று நினைத்து, அப்படியே பேசுகின்றனர். மக்களின் கருத்துக்கள் இவ்வாறாக பெரும்பாலும் காணப்படுகின்றன. இதையெல்லாம் கடந்து, ஆசை, அச்சம், கோபம் முதலியவற்றை நீக்கி, எது மேலான தகுதியுள்ளதோ, அதை உரைக்கத் தகுந்தவர் ஸ்ரீகிருஷ்ணர் ஒருவரே.

– மஹாபாராதம் சபா பர்வம்

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: நாதநாமக்ரியா தாளம் : ஆதி

பல்லவி

ராதை பிறந்தனளே எங்கள்

ராதை பிறந்தனளே (ராதை ..)

சரணம்

மரங்களே கொடிகளே, எங்கள் ராதை பிறந்தனளே

மலர்களே தளிர்களே, எங்கள் ராதை பிறந்தனளே

மீன்களே மான்களே, எங்கள் ராதை பிறந்தனளே

மயில்களே குயில்களே, எங்கள் ராதை பிறந்தனளே

தோழி நீ வாழி, எங்கள் ராதை பிறந்தனளே

ஆழியே மாமழையே, எங்கள் ராதை பிறந்தனளே

(முழு)மதியே யமுனை நதியே, எங்கள் ராதை பிறந்தனளே

(பசு)கன்றே கோவர்த்தன குன்றே, எங்கள் ராதை பிறந்தனளே

முனியே நான்முகனே, எங்கள் ராதை பிறந்தனளே

கனியே கற்பகத்தருவே, எங்கள் ராதை பிறந்தனளே

சிவனே ஷண்முகனே, எங்கள் ராதை பிறந்தனளே

வனமே பிருந்தாவனமே, எங்கள் ராதை பிறந்தனளே

மாயே மஹாமாயே, எங்கள் ராதை பிறந்தனளே

தாயே உனை ஆள, எங்கள் ராதை பிறந்தனளே

நந்தா யசோதா, எங்கள் ராதை பிறந்தனளே

ராமா பலராமா, எங்கள் ராதை பிறந்தனளே

கண்ணா மணிவண்ணா, எங்கள் ராதை பிறந்தனளே

எண்ணம் ஈடேற, எங்கள் ராதை பிறந்தனளே

# மதுரமான மஹனீயர் – 187

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

மஹாபாரத யுத்தம் ஆரம்பிக்கப் போகின்றது. ரதத்தை இரண்டு படைகளுக்கும் இடையில் நிறுத்து என்று கம்பீரமாக கூறினான் அர்ஜுனன். பீஷ்மர், துரோணர் மற்றும் பலர் தன்னுடைய எதிர் படையில் இருப்பதை பார்த்து கலக்கம் அடைந்தான். உடல் வியர்த்து, தளர்ந்து, தன்னுடைய காண்டீபம் என்ற வில்லை கீழே போட்டு விட்டு, அமர்ந்து விட்டான்.

அர்ஜுனன் கிருஷ்ணனை பார்த்து, "நான் யுத்தம் செய்ய மாட்டேன். இவர்களை எல்லாம் கொன்று எனக்கு ராஜ்யம் தேவையில்லை" என்கின்றான். அவனுக்கு வேதாந்தத்தை உபதேசம் செய்ய ஆரம்பிக்கின்றார் கிருஷ்ணர். அப்படி சொல்லி கொண்டே வந்தவர், அவனுக்கு தன்னுடைய விஸ்வரூபத்தை காட்டி அருளினார்.

அவனால் அந்த விஸ்வரூபத்தை பார்க்க முடியாதபொழுது, "அர்ஜுனா, உனக்கு ஞான திருஷ்டியை தருகின்றேன். என்னை நன்றாக பார்" என்று கூறி அருளினார். திவ்ய திருஷ்டியைப் பெற்ற அர்ஜுனனால் விஸ்வரூபத்தை நன்றாக பார்க்க முடிந்தது.



இது ஒருபுறம் இருக்கட்டும். பகவானுடைய கதைகளை நாம் தினமும் பாராயணம் செய்கின்றோம். அல்லது பலமுறை கேட்கின்றோம். வேதாந்தத்தை அடிக்கடி படிக்கின்றோம் அல்லது கேட்கின்றோம். அது நமக்கு அனுபவத்தில் வராதது மட்டுமில்லை; அவற்றை நம்மால் சரியாக புரிந்து கொள்ளக் கூட முடிவதில்லை.

இப்படித்தான் அவதார புருஷர்கள், மஹான்கள் போன்றவர்களுடன் எப்பொழுதும் வாழ்ந்தும், தொண்டு செய்தும், அவருடைய அருளுக்கு பாத்திரமானவர்களால் கூட, அவர்களை முழுமையாக புரிந்துகொள்ள முடிவதில்லை. ஏன்? எவ்வளவு படித்தாலும், கேட்டாலும், கோவில், குளம் என்று போனாலும் ஆஸ்திகர்களுக்கு கூட சமயத்தில் கடவுள் இருக்கின்றாரா? பாவம், புண்யம் எல்லாம் உண்மையா? மறுபிறவி உண்மையா? வைகுண்டம் போன்ற உலகங்கள் எல்லாம் உண்மையில் உள்ளனவா என்ற சந்தேகம் அவ்வப்பொழுது தோன்றி தோன்றி மறைகின்றது. இதற்கு காரணம் என்ன?

நம்மிடம் இருப்பது ஜடத்தன்மை உள்ள புத்தி. இந்த புத்தியினால் தெய்வீகமான விஷயங்களை புரிந்துகொள்ள முடியாது. ஜடத்தன்மை உடைய புத்தி ஜடபிரபஞ்சத்தைத்தான் புரிந்து கொள்ளக்கூடியது. நாம் பகவானையும் அவனுடைய தத்துவங்களையும் உள்ளவாறு புரிந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டால், பகவானே திவ்யமான புத்தியையும், நமக்கு தந்து அருளுகின்றான். அந்த திவ்யமான புத்தியை கொண்டுதான், தேவ ரகசியங்கள் நமக்குப் புரிய வரும். பகவானை பார்ப்பதற்கு மட்டும் திவ்ய திருஷ்டி வேண்டும் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். பகவானை புரிந்து கொள்வதற்கும், திவ்யமான புத்தி வேண்டும் என்பதே உண்மை. இதை சமீபத்தில் சென்னை ப்ரேமிக பவனத்தில் ஒரு சத்சங்கத்தின்பொழுது, ஸ்ரீஸ்வாமிஜி பகவத்கீதை பக்தி யோக உபன்யாசத்தில் கூறினார்கள்.

தேவலோகத்தில் மோக்ஷத்திற்கு ஆசைப்படும் முமுக்ஷுக்களே கிடையாது. பூலோகத்தில்தான் மோக்ஷத்திற்கு ஆசைப்படும் முமுக்ஷுக்கள் அதிகம். ஏன் என்றால், தேவலோகத்தில் மரணம், மூப்பு, வியாதி போன்ற துக்கங்களே கிடையாது. அதனால் அவர்களுக்கு மோக்ஷத்தில் ஆசையே ஏற்படுவதில்லை.

– உபநிடதம்



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி : ஒருவனுக்கு கடுமையான வியாதி, அந்த வியாதிக்கான மருந்து ஒன்று உள்ளது. அந்த மருந்தை சாப்பிடாமல் அதன் பெயரை மட்டும் ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தால், அவனுடைய வியாதி போய்விடுமா?
பதில் : மருந்தை உட்கொண்டால்தான் வியாதி போகுமே தவிர, மருந்தின் பெயரை மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி வியாதி போகும்?

கேள்வி : ஒருவனுக்கு நல்ல பசி, அவனுக்கு சாப்பிடுவதற்கு அன்னம் கொடுக்காமல், அன்னம், அன்னம் என்று சொல்லிக் கொண்டே இருக்க சொன்னால், அவனுடைய பசி போய்விடுமா?
பதில் : அது எப்படி பசியை போக்கும்? உணவு உட்கொண்டால்தான் பசி போகும்.

கேள்வி : அதுபோல், தண்ணீர் வேட்கையினால் தவிப்பவனுக்கும், தண்ணீர், தண்ணீர் என்று சொன்னால் வேட்கை தணியாது; நீர் பருகினால்தான், அவனுடைய வேட்கை தணியும் அல்லவா?
பதில் : ஆம் நிச்சயமாக! இதில் என்ன சந்தேகம்?

கேள்வி : இவைகள் இப்படி இருக்க ஒருவரை பார்த்து, "நீ சரீரம் அல்ல, பிராணன் அல்ல, மனது அல்ல, அறிவு அல்ல, ஆனந்தத்தை தரிப்பவன் அல்ல, ஆனந்தமயமான ஆத்மா" என்று திரும்ப திரும்ப சொல்வதால் மட்டும் என்ன பலன் எற்பட போகின்றது?
பதில் : பலன் ஏற்படும்.

கேள்வி : அது தான் எப்படி என்கின்றேன்?
பதில் : சொல்கின்றேன் கேள். ஒருவன் உன்னுடைய பக்கத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறான். நீயோ பக்கத்தில் விழித்து

கொண்டு உள்ளாய். ஏதோ புத்தகம் படித்து கொண்டிருக்கின்றாய் என்று வைத்து கொள்வோம்.

திடீரென்று உன் பக்கத்தில் படுத்துள்ளவன், “ஐயோ என்னை சிறையில் போட்டு கசையால் அடிக்கின்றார்களே! வலி பொறுக்க முடியவில்லையே” என்று குய்யோ முறையோ என்று கதறுகின்றான். உடனே, நீ ஒஹோ! அவன் கனவு கண்டு கொண்டிருக்கின்றான். அதில் சிறை வாசமும், கசையடியும் காண்கின்றான் என்பதை உணர்கின்றாய். உடனே அவனுடைய பெயரை உரக்க சொல்லி, “விழித்துக் கொள்! விழித்துக் கொள்” என்கின்றாய். அவனும் விழித்துக் கொள்கின்றான். “கண்டது கனவுதான்” என்ற உடனே அவன் பூரண நிம்மதியை அடைகின்றான் அல்லவா! அதுபோல் தான் இதுவும்.


# 'MADHURAM' - STALL

Prop: CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA
38/22, Thambaiya road Extn, West Mambalam, Chennai - 600 033

**New Stall inaugurated by Sri Sri Muralidhara Swamiji on the occassion of Pillayar Chathurthi**



## Available in “MADHURAM” Bookstall

- All Books of Sri Sri Swamiji
- All CDs and DVDs of Sri Sri Swamiji
- Pooja Items
- Homa Articles
- Other Divine Books / CD's
- Krishna T-Shirts
- Beautiful Dolls ( for navarathri)
- Navarathri pooja Items

**NO HOLIDAYS**
**9AM to 1.30PM**
**3PM to 9PM**

**CONTACT:**
+91 44 2372 7400



# பாகவத பழம் (19)

**பாகம் 2 – அத் 6**

– ஸ்ரீஸ்வாமிஜி

நாரதர் தொடர்ந்து தனது முற்பிறப்பை பற்றி சொல்லலானார். “என் தாய் யமனால் தூண்டப்பட்டு ஒரு பாம்பு கடித்து மாண்டாள். வியாஸரே! “அப்பொழுது நான் என்ன நினைத்திருக்க வேண்டும்? இவ்வளவு நாட்கள் ஸாதுக்களுடன் இருந்தேனே, ஏற்கனவே தந்தை இல்லாத குழந்தை. ஒரே ஆதரவாக இருந்த தாயும் இப்பொழுது இல்லையே, நான் அனாதையாகிவிட்டேனே” என்றல்லவா நினைக்க வேண்டும். ஆனால் எனக்கு பந்தமாக இருந்த தாயும் இறைவன் திருவடியை அடைந்தார். நாம் இனி ஸ்வதந்திரமாக பகவானை தியானம் செய்யலாம் என்றே நினைத்தேன். மேலும் தன்னை ஆஸ்ரயிப்பவர்களுக்கு, பகவான் நன்மையே புரிவான் என்று எனக்கு தோன்றியது. ஸாதுக்கள் ஸங்கத்தில் இருப்பவர்களுக்கு துக்கம் வராமல் இருக்காது. ஆனால் அத்தகைய துக்கத்தையும் தாண்டி விவேகம் முன் வந்து நிற்கும். நான் மெதுவாக வடக்கு திக்கை நோக்கி புறப்பட்டேன்’’ என்றார் நாரதர். அப்படி புறப்பட்ட நாரதர், நகரங்கள், அழகான கிராமங்கள், சோபையான காடுகள், பயங்கரமான காடுகள், இவற்றை எல்லாம், தான் கடந்து வந்ததை முழுவதுமாக வர்ணிக்கிறார்.

நடந்து வந்த களைப்பால், அவர் ஒரு பெரிய கோரமான காட்டில் தங்குவதற்கு முடிவு செய்தார். ஒரு நீர் மடுவில் இறங்கி ஆசமனம் செய்து, ஸ்நானம் செய்து, நீர் அருந்தி களைப்பைப் போக்கிக் கொண்டார். அங்கு ஒரு அரசமரம் இருந்தது. மரங்களுக்கெல்லாம் ராஜா அது. அதனால்தான் அதற்கு தமிழில் அரசமரம் என்றே பெயர். அதன் அடிபாகத்தை அடைந்து, வடக்கு நோக்கி அமர்ந்தார். அந்தக் காட்டில் ஒரு மனிதன் கூட கிடையாது. கவலைப்படவில்லை. பயப்படவில்லை. வேதமுறைப்படி ஹ்ருதயத்தில் பரமாத்மாவை தியானித்தார். “மனதை

பிரணாயாமத்தால் ஜெயிக்கலாம், உபவாசத்தால் ஜெயிக்கலாம், தியானத்தால் ஜெயிக்கலாம். ஆனால் நான் என்னுடைய மனதை பிரேமபக்தியால் ஜெயித்தேன்” என்கின்றார் நாரதர்.

ஆனந்தக் கண்ணீர் நிறைந்த கண்களையுடைய என்னுடைய

*எல்லோரும் பல பிறவிகளாக, பல்லாயிரக்கணக்கான வருடங்கள் தவம் புரிந்துதான், என் அருளைப் பெற்றுள்ளார்கள். ஆனால் நீயோ குறுக்கு வழியில் வந்து விட்டாய்! அந்த குறுக்கு வழி என்ன தெரியுமா? ஸாதுக்களுடைய சேவை! அவர்களுடைய கிருபை!*

மனதில் வாஸுதேவன் மெதுவாக ஆவிர்பவிக்கலானான். அப்பொழுது ஒரு ஆனந்தமே மிஞ்சியிருந்தது. வேறொன்றையும் நான் காணவில்லை. திடீரென்று வாஸுதேவனின் ரூபம் மறைந்தது. வாஸுதேவனைக் காணாததால் தியானம் கலைந்தது. மீண்டும் மீண்டும் தியானம் செய்து, அந்தப் பரமாத்மாவை ஹ்ருதயாகாசத்தில் பார்க்க முற்பட்டும், எனக்கு அது சாத்யமாகவில்லை.

அப்பொழுது இடிபோன்ற ஒரு குரலில் பகவான் பேசலானான். “இந்தப் பிறவியில் என்னைப் பார்ப்பதற்கான பக்குவம் உனக்குப் போதவில்லை. பக்குவம் இல்லாதவர்களுக்கு என் தரிசனம் கிடைக்காது. ஒரு தடவை பார்த்த என் உருவம் அதன் வேலையைச் செய்து, மேலும் மேலும் என் இடத்தில் ப்ரேமையை வளர்க்கும். அதனால் தானாகவே எல்லா கர்மாக்களும் நாசமடையும். இதுநாள் வரையில், நான் யாருக்கும் இவ்வளவு சீக்கிரம் அருள் புரிந்ததும் கிடையாது. இவ்வளவு சீக்கிரம் யாருக்கும், என்னிடம் த்ருட பக்தி வந்ததும் கிடையாது. எல்லோரும் பல பிறவிகளாக, பல்லாயிரக்கணக்கான வருடங்கள் தவம் புரிந்துதான், என் அருளைப் பெற்றுள்ளார்கள். ஆனால் நீயோ குறுக்கு வழியில் வந்து

விட்டாய்! அந்த குறுக்கு வழி என்ன தெரியுமா? ஸாதுக்களுடைய சேவை! அவர்களுடைய கிருபை! இந்த சரீரத்தை விட்டுவிட்டு, எனக்கு பார்ஷதனாக இருக்கும் தன்மையை அடையப் போகின்றாய்" என்று பகவான் பேசினான்.

அப்பொழுது நாரதர் யோசித்தார். அவர் தான் செய்த ஜபத்தினாலோ, தியானத்தினாலோ, தன்னுடைய வைராக்யத்தினாலோ பகவத் தர்சனம் கிடைத்ததாக நினைக்கவில்லை. "நமக்கு அனுக்ரஹம் செய்த ஸாதுக்கள், இப்பொழுது ஏதோ ஒரு ஊரில் ஸஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள். அப்பொழுது அவர்களில் ஒருவர், நாம் அந்த ஊரில் தங்கியிருந்தபொழுது நம் பின்னாலேயே கைங்கர்யம் செய்த ஒரு பெண்ணின் குழந்தை ஓடி ஓடி வந்ததே; அந்தக் குழந்தை இப்பொழுது எங்கு இருக்கின்றானோ? என்ன செய்து கொண்டிருக்கின்றானோ? என்று என்னைப்பற்றி நினைத்திருப்பார்கள். ஸாதுக்கள் ஹ்ருதயத்தில் என்னைப் பற்றிய சிந்தனை வந்ததால்தான், பகவான் இப்பொழுது எனக்கு தர்சனம் கொடுத்துள்ளார்" என்று நினைத்தார்.

"மேலும் ஆகாயத்தில் தோன்றிய அந்த வாக்கு, "என்னிடத்தில் வைக்கப்பட்ட பக்தி இனி வளருமே தவிர மாறாது, மற்றும் இந்தப் பிறவியில் நடந்தது எதுவும் உனக்கு மறக்கவும் மறக்காது'' என்று கூறி அமைதியானது. ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளை, ஆகாயத்தில் பாவித்து என் சிரசானது தரையில் பட, விழுந்து நமஸ்கரித்தேன்".

"அதிலிருந்து வாஸுதேவனுடைய பெயர்களை வெட்கத்தை விட்டு உரக்கக் கூறிக் கொண்டு, பூமியில் ஸஞ்சரித்து வந்தேன். மின்னல் போன்று என் மரணமும் வந்து, அந்த சரீரம் கீழே விழுந்தது. பிரம்மாவின் மூச்சுக்காற்றுடன் உள்ளே சென்று, மீண்டும் அவரிடமிருந்து மரீசி முதலானவர்களுடன் பிறந்தேன். இந்தப் பிறவியில் தேவதத்தாம் என்று பகவானால் கொடுக்கப்பட்ட

வீணையை மீட்டிக் கொண்டு, அவன் புகழைப் பாடிக்கொண்டு, தடைகளே இல்லாமல், எல்லா உலகங்களையும் சுற்றி வருகின்றேன்".

"நான் தியானம் செய்தபொழுதுகூட பகவான் தோன்றி மறைந்தான். ஆனால், கீர்த்தனம் செய்யும் பொழுது, என்னைவிட்டு அவன் விலகுவதே இல்லை. சென்ற பிறவியில் உனக்கு பக்குவம் இல்லை; அடுத்த பிறவியில் தரிசனம்



தருகின்றேன் என்று கூறி மறைந்த பகவான், இந்தப் பிறவியில் அவனை விரட்டி அடித்தால்கூட செல்லமாட்டேன் என்கின்றான். காரணம் என்ன தெரியுமா? சென்ற பிறவியில் நான் தியானம் செய்தேன். இந்தப்பிறவியிலோ நான் கீர்த்தனம் செய்து கொண்டிருக்கின்றேன். அதுதான் காரணம்".

"எந்த இடத்தில் ஸாதுக்களால் லௌகீக கலப்பு இல்லாமல் கீர்த்தனம் நடக்கின்றதோ அந்த இடத்தில் பகவான் தன் பூர்ண கலையுடன் அந்த நொடியே பிரஸன்னமாகி விடுகின்றான் என்பது பிரஸித்தம்தானே. இப்படி அவனைக் கீர்த்தனம் செய்துகொண்டு உலகத்தில் எல்லோருக்கும் சாந்தியைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றேன்'' என்றார். மேற்கூறிய விஷயங்களை விஸ்தாரமாக எடுத்துக்கூறி, சிரித்த முகத்துடன் கீர்த்தனம் செய்தபடியே நாரதர் புறப்பட்டு சென்றார்.

(கனியும்)

என்னிடம் ஒருவர், அவருடைய கஷ்டத்தை கூறி கண்ணீர் விட்டு அழுதார். இந்த கஷ்டம் விலக ஏதாவது பரிகாரம் சொல்லும்படி என்னை நிர்பந்தப்படுத்தினார். அவரிடம், பரிகாரம் ஒன்றும் வேண்டாம்; "நான் ஏதோ ஒரு பாவம் செய்துள்ளேன். அந்த கர்மவினையின் பயனாகத்தான் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. அந்த பாவத்தை மன்னித்தருள்" என்று, பகவானிடம் மனம் உருகி பிரார்த்தித்துக்கொள் என்றேன். உடனே அவர், "இறைவா!, நான் ஏதாவது பாவம் செய்திருந்தால் அதை மன்னித்துவிடு" என்றார். பாவம் செய்துள்ளேன், அல்லது செய்திருப்பேன் என்று அவருடைய வாயிலிருந்து வரவில்லை; பாவம் செய்திருந்தால் என்றுதான் வருகின்றது; மனிதன் எவ்வளவு துக்கப்பட்டாலும், அவனுடைய EGO அவனை விடமாட்டேன் என்கின்றது.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

வேறு மொழியை தாய்மொழியாக கொண்ட சிறுவன் ஒருவன், பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் கற்றுக் கொண்டான். பள்ளி இறுதி வகுப்புடன் படிப்பை முடித்துவிட்டான். இவன் ஆங்கில மொழி நன்றாக பேசுவான்; எழுதுவான். ஒரு நாள் ஆங்கில மொழியை தாய்மொழியாக கொண்ட, ஒருவருடைய ஆங்கில உரையை கேட்க போனான். அப்பொழுது அவனுக்கு, நாம் பேசுகின்ற ஆங்கில மொழியைத்தான் அவரும் பேசுகின்றார் என்பது தவிர, வேறு ஒன்றும் புரியவில்லை. அதுபோல்தான், ஞானி செய்யும் செயல்களை பார்ப்பவனுக்கு, நாம் செய்யும் செயல்கள் மாதிரிதான் அவரும் செய்கின்றார் என்பதை தவிர, வேறு ஒன்றும் புரிவதில்லை.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

# மலேசியாவில் பிரேமிகவரதன்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன் மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீபிரேமிகவரத திவ்யதம்பதிகளின் சன்னதியை பாக்யநாதன்ஜி, செப்டம்பர் 17, 18 தேதிகளில், மலேசிய தலைநகரமான கோலாலம்பூரில் உள்ள நாமத்வார் மையத்தில் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியின்பொழுது, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், சென்னையிலிருந்து நேர்முகமாக டெலி-கான்பரன்ஸ் மூலம் மஹாமந்திர கீர்த்தனத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அருளுரை வழங்கினார்கள். மலேசிய டிவைன் லைஃப் சொசைட்டியை சேர்ந்த, ஸ்ரீஸ்வாமி குருபக்தானந்த சரஸ்வதி மஹராஜ் மற்றும் ஸ்ரீமதி ஜெயச்சந்திரன், ஸ்ரீ ஜெயச்சந்திரன் ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்தனர். இந்த கோலாஹலமான வைபவத்தில் கலந்து கொள்வதற்காகவே, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேஷியாவிலிருந்து பல அன்பர்கள் வந்திருந்து, மிக உற்சாகமாகவும், அகண்டமாகவும் மஹாமந்திர கீர்த்தனம் செய்தவண்ணம் இருந்தனர். 18ஆம் தேதி பக்தர்கள் பலர், தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அன்று மழை பொழிந்தது, பிரேமிகவரதனின் மகிழ்ச்சியை பறை சாற்றியது. மலேசிய நாமத்வாரில் உள்ள பிரேமிகவரதனின் சன்னதியைத்தான் இவ்விதழ் முன் அட்டையில் பார்க்கிறோம்.

PERTUBUHAN KEBAJIKAN NAMADWAAR DAERAH PETALING, SELANGOR மலேசியா நாமத்வார் அறக்கட்டளையை ராஜேஸ்வரிஜி மற்றும் அவர்கள் குடும்பத்தினர், பிரேமலதாஜி, சுனிதாஜி, விஜி மற்றும் நாதன்ஜி, கமலாஜி, ஆனந்தன்ஜி, திலகவதிஜி, பாலன்ஜி, வினோதினிஜி, திலாஜி ஆகிய குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி அன்பர்கள், ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாசிகளுடன், மார்ச் 2011இல் துவக்கி, மிக சிறப்பாக பல பணிகளை நடத்தி வருகின்றனர்.

செப்டம்பர் 18ஆம் தேதியன்று, நாமத்வாரில் பாக்யநாதன்ஜி ஸ்ரீஸ்வாமிஜியின் திவ்ய சரித்திரத்தை – "மதுரஸ்மரணம் "My Guru As I See HIM" தலைப்பில், அழகாக பேசினார். மேலும், 16ஆம் தேதியன்று மலேசிய சிவிக் சென்டரில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையையும்,

20ஆம் தேதியன்று மலாய் பல்கலைக்கழகத்தில் "Timeless Wisdom of Our Scriptures" என்ற தலைப்பில் ஒரு சத்சங்கமும், 23ஆம் தேதி Brickfields School இல் சுமார் முன்னூறு மாணவர்கள் மத்தியில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும் பாக்யநாதன்ஜி நடத்தினார். இந்த சத்சங்கங்களில் கீர்த்தனமே மிக சிறந்த பிரார்த்தனை என்பதையும், கீர்த்தனம்தான் பகவானின் கிருபையை பெற்று தரும் என்பதையும் வலியுறுத்தி பேசினார். இது தவிர செப்டம்பர் 19ஆம் தேதியன்று "அஸ்ட்ரோ வானவில்" தொலைக்காட்சியில் ஸ்ரீஸ்வாமிஜியின் உபதேசங்கள் மற்றும் மலேசிய நாமத்வார் செயல்பாடுகள் குறித்தும் பேசினார். மேலும் பல கோவில்கள் மற்றும் இல்லங்களில் சத்சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, 26ஆம் தேதி, பாக்யநாதன்ஜி சிங்கப்பூரில் சில சத்சங்கங்களில் கலந்து கொள்ள சென்றார்.



# வாசனைகள் சேர்வதை தடுக்க உபாயம்

-பத்மபாதர்

பள்ளி குழந்தைகளுக்கு, வாய்ப்பாடு (MATHS) மனப்பாடம் ஆக வேண்டும் என்றால் திரும்ப திரும்ப சொல்ல சொல்வார்கள். அப்படிச் சொல்லிப் பழகினால், மனதில் ஆழ்ந்து பதிந்து விடுகின்றது. பிறகு வாழ்நாள் முழுவதும், நாம் அதை மறப்பதில்லை. இன்றும் கூட வேதம் படிப்பவர், "அத்யயனம்" என்று அதை உரு போட்டு (மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி) மனப்பாடமாக வைத்துக் கொள்கின்றார்கள்.

ஆக இதில் இருந்து என்ன தெரிகின்றது? மீண்டும் மீண்டும் ஒரு விஷயத்தை சொல்லிக் கொண்டே வந்தால், அது மனதில் நிலைத்து நின்றுவிடுகின்றது.

வாயினால் சொல்வதைக் காட்டிலும், மனதினால் மீண்டும் மீண்டும் சிந்தனை செய்வதற்கு அதிக பலம் உண்டு. அதற்கு தான் தியானம் என்று பெயர். உபாஸனை செய்பவர்கள், மனதில் தங்களுடைய உபாஸனை தெய்வத்தை பிரதிஷ்டை செய்யும் பொருட்டு, அந்த தெய்வத்தின் உருவத்தையோ மந்திரத்தையோ திரும்ப திரும்ப மனதில் கொண்டு வந்து ஸ்திரப்படுத்தி கொள்கின்றார்கள்.

*மனதின் ஓட்டங்கள், நம் கையில் இல்லை. சும்மா இருந்தால், மனது அதனுடைய வேலையை காட்ட ஆரம்பிக்கும். ஆகவே அதற்கு இடம் கொடுக்க கூடாது என்று ஆசைப்பட்டால் விடாமல் மஹாமந்திர கீர்த்தனம் சொல்லி வா.*

உலக வாழ்க்கையில் நாம் எந்த கார்யமும் செய்யாமல், சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுதும், நம்முடைய மனது மட்டும் வேலை செய்துகொண்டே இருக்கின்றது. அப்படி சிந்திக்கும் பொழுது, அது எதை எதை திரும்ப திரும்ப சிந்தனை செய்கின்றதோ,

அது மனதில் மாற்றவே முடியாத வாஸனையாக படிந்துவிடும். அப்படி எவற்றையெல்லாம் எந்த அளவிற்கு சிந்தித்தோமோ, அந்த அளவிற்கு அவைகள் இந்த பிறவியிலேயோ, அல்லது வரும் பிறவிகளிலேயோ நிகழ்ந்தே தீரும். தீய எண்ணங்கள் என்று இல்லை; நல்ல எண்ணங்களும் அப்படித்தான். ஒருவர் தான் படித்த பள்ளியைப் பற்றியே சிந்தித்து வருவாரானால், அவர் எவ்வளவு முறை ஒருமுகப்பட்டு ஆசையுடன் சிந்திக்கிறாரோ அந்த அளவு வாசனை திடமாகி, மீண்டும் ஏதோ ஒரு பிறவியில், அந்த பள்ளியுடன் சம்பந்தப்படுத்திவிடும்.



இவைகளே இப்படி என்றால், எதிர்மறையாகவும், தீய எண்ணங்களையும் திரும்ப திரும்ப சிந்தித்து வருவானானால், அது திடமாகிவிடும். பிறகு பகவானால் கூட உன் மனதில் இருந்து, அந்த வாசனையை எடுக்க முடியாது.

மனதின் ஓட்டங்கள், நம் கையில் இல்லை. சும்மா இருந்தால், மனது அதனுடைய வேலையை காட்ட ஆரம்பிக்கும். ஆகவே, அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று ஆசைப்பட்டால், விடாமல் மஹாமந்திர கீர்த்தனம் சொல்லி வா. இது சுலபமானது. மனது கண்டபடி ஓடி புதிய வாசனைகளை சேர்த்துக்கொள்வதையும், சம்பாதித்த வாசனைகளை திடமாக்கிக் கொள்வதையும், இது சுலபத்தில் தடுத்துவிடும். அந்த அளவிற்கு எதிர்கால துக்கம் குறையும்.

# நாகம் என்னவோ பொய்தான்

-பத்மபாதர்



ஸமர்த்த ராமதாஸருக்கு ரங்கநாத கோஸ்வாமி என்ற சிஷ்யர் இருந்தார். நிரம்ப படித்தவர் அவர். எப்பொழுதும், "இந்த உலகம் பொய்; ப்ரும்மமே ஸத்யம்" என்று அவருடைய மற்ற சிஷ்யர்களுடன் வாதிட்டு வருவார். ஒரு நாள் "மை" வித்தை காண்பிப்பவர் ஒருவர் வந்தார். ஸமர்த்த ராமதாஸர், ரங்கநாத கோஸ்வாமியை அழைத்து, "இந்த 'மை' வித்தை காண்பிப்பவர் கையில் ஒரு நாகம் வைத்துள்ளாரே, அது பொய்யா அல்லது உண்மையா?" என்று கேட்டார். அதற்கு ரங்கநாத கோஸ்வாமி, "காண்பது எல்லாம் பொய் என்றால் இது நாகம் மட்டும் விதிதிலக்கா என்ன? இந்த நாகமும் பொய்தான்" என்றார். அப்படியானால், அந்த நாகத்தை கையினால் பிடி என்றார் குரு ஸமர்த்தர். ரங்கநாத கோஸ்வாமியும் ஓடிச்சென்று, அந்த நாகத்தை கையினால் பிடித்தார். அந்த நாகம், ரங்கநாதஸ்வாமியின் கையை ஒரு சுற்று சுற்றி, தன்னுடைய விஷபல்லால், ஒரு போடு போட்டது. வலி தாங்காமல் துடிக்க ஆரம்பித்தார் ரங்கநாத கோஸ்வாமி. ஸமர்த்த ராமதாஸரோ, "என்ன நாகம் பொய் என்றாய். இப்பொழுது வலியினால் துடிக்கின்றாயே" என்றார். அப்பொழுதும் ரங்கநாத கோஸ்வாமி சளைக்கவில்லை.

> ஸமர்த்த ராமதாஸரோ, ''என்ன நாகம் பொய் என்றாய், இப்பொழுது வலியினால் துடிக்கின்றாயே'' என்றார். அப்பொழுதும் ரங்கநாத கோஸ்வாமி சளைக்கவில்லை.

"நாகம் என்னவோ பொய்தான்; ஆனால் வலி என்னவோ சத்யம்தான்" என்றார்.


சனாதனப் புதிர் - பகுதி - 32 **–ஆத்ரேயன்** ( விடைகள் அடுத்த இதழில்)

1. வாக்கிய விருத்தி - இந்த நூல் எதை குறிக்கின்றது? யாரால் எழுதப்பட்டது?
2. "சிவோஹம்" என்று முடியும் நிர்வாண ஷட்கம், "ததேவாஹம் அஸ்மி" என்று முடியும் நிர்வாண மஞ்சரி, "குருதீக்ஷா க்ஷததமா:" என்று முடியும் ஜீவன் முக்த ஆனந்த லஹரீ என்ற இந்த அத்வைத பரமான கிரந்தங்கள் யாரால் செய்யப்பட்டது? எத்தனை ஸ்லோகங்கள்?
3. "அ"காரம் முதல் "க்ஷ"காரம் வரை அக்ஷர வரிசைப்படி 50ஸ்லோகங்கள் கொண்டதும், முடிவில் தவசரண யுகம் என்று வரும் ஸ்துதியின் பெயர் என்ன? யாரை குறித்து? எழுதியவர் யார்?
4. பகவான் ரமணர் சிவானந்த லஹரியின் சாரஸங்கிரகம் தொகுத்துள்ளார். எந்த ஸ்லோகங்கள் எடுக்கப்பட்டுள்ளன?
5. உபதேஸ ஸாஹஸ்ரீ என்னும் நூல் யாரால் செய்யப்பட்டது? இதில் மொத்தம் எத்தனை உபதேசங்கள் உள்ளன?

## **சனாதனப் புதிர் : பகுதி – 31** விடைகள் –ஆத்ரேயன்

1. மஹாபாரதம் - துரோண பர்வா - 203 அத்தியாயம் - இதைப்படித்தால் ஸ்ரீருத்ரத்தை பலமுறை ஜபித்த பலன் கிடைக்கும்.
2. மஹாபாரதம் - ஆஸ்வமேதிக பர்வா - மஹாபாரதம் - மோக்ஷபர்வம்.
3. முதல் தமயன் - தர்ம தேவதை; மற்றவர்கள் அக்னி, அரசன், திருடன். தர்மம் செய்யாவிட்டால் மற்றவர்கள் அபகரிக்கின்றனர்.
4. தாரேஷணை - மனைவி, மக்கள், விஷய ஆசை; வித்தேஷணை- வீடு, நிலம், பணம், சொத்து; லோகேஷணை - பெயர், புகழ்; இந்த ஆசைகளுக்கு மனிதன் அடிமையாகி விடுகின்றான்.
5. ஸ்ரீசங்கரபகவத்பாதர்; 144ஸ்லோகங்கள். "நானே ப்ரஹ்மம்" என்ற அனுபவம் அபரோக்ஷமாக, அதாவது ப்ரத்யக்ஷமாக ஏற்படுவதற்கு வேண்டிய சாதனங்களை கூறும் நூல்.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



# Gururam Consulting Private Limited

# பாலகர்களுக்கு ஒரு கதை



## இறைவன் சரியாகத்தான் உலகை இயக்குகிறார்

நரேந்திரன் ஐந்து வயது குழந்தை. எப்பொழுதும் ஓயாமல் ஏதாவது விளையாடி கொண்டே இருப்பான். விளையாட்டு விஷமமாவதும் உண்டு. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் நரேந்திரனின் அம்மாவிடம் வந்து, ஏதாவது புகார் சொல்லி கொண்டே இருப்பார்கள். நரேந்திரனின் அம்மா ஒரு நாள் EMBROIDERY WORK (பூவேலை) செய்து கொண்டிருந்தாள்.

நரேந்திரனோ, அம்மாவை வேலை செய்ய விடாமல், அங்கேயும் இங்கேயும் ஓடி கொண்டிருந்தான். நரேந்திரனை அழைத்து தாயார் சில இனிப்புகளை உண்பதற்காக கொடுத்தாள். “இவைகளை நீ என் காலடியில் அமர்ந்துதான் சாப்பிட வேண்டும்” என்று சொல்லி தன் காலடியில் அவனை உட்கார வைத்துக் கொண்டாள். அம்மாவோ, உயரமான ஒரு (STOOL)ஸ்டூலில் அமர்ந்தபடியே (RING) வளையம் ஒன்றை வைத்து கொண்டு, EMBROIDERY WORK (பூவேலை) செய்து கொண்டிருந்தாள். கீழே அமர்ந்திருந்த நரேந்திரன், மேலே தலையை தூக்கி, அம்மா என்ன செய்கின்றாள் என்று பார்த்தான். அம்மாவின் கையில் ஒரு RING வளையம் இருந்தது. அந்த RING வளையத்திற்குள் ஒரு துணி இருந்தது. அதில் பல வண்ண நூல்கள் தாறுமாறாக தொங்கி கொண்டிருந்தன.

நரேந்திரனுக்கு வேடிக்கையாக இருந்தது. அம்மா எதற்காக ஊசியைக் கொண்டு, கோணலும் மாணலுமாக நூல்களை ஏதோ செய்து கொண்டிருக்கின்றாள் என்று நினைத்தான். நரேந்திரனுக்கு அம்மா செய்கின்ற செயல் முட்டாள்தனமாக பட்டது. சிறிது நேரம் சென்றிருக்கும்; EMBROIDERY WORK முழுவதுமாக முடிந்தபிறகு, தாயார் அவனுக்கு துணியின் மேல் பகுதியை திருப்பி காண்பித்தாள். அதில் அழகான ரோஜாப் பூக்கொத்து அப்பொழுதுதான் மலர்ந்தது போல் அழகாக இருந்தது. நரேந்திரன்

அந்த அழகிய பூங்கொத்தை பார்த்து வியப்படைந்தான். அந்த நரேந்திரனைப் போல்தான் நாமும். இறைவன் இந்த உலகத்தை இயக்கும் விதத்தில் பல குறைபாடுகளை காண்கின்றோம். பல விஷயங்கள் நமக்கு புரிபடாமலும் முட்டாள்தனமாகவும் படுகின்றது. மேலும் இப்படி இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும் என்றும் நினைக்கின்றோம். நரேந்திரன் கீழே இருந்து அம்மா செய்த வேலையை பார்த்தது போல், நாமும் கீழே இருந்துதான் இறைவனின் செயல்களை விமர்சிக்கின்றோம். கீழே இருந்து என்றால் என்ன என்கின்றீர்களா? நாம் நம்முடைய குறுகிய மனப்பான்மையுடன் பார்க்கும்பொழுது, எல்லாம் தாறுமாறாக தெரிகின்றது. மேலிருந்து பார்ப்பது என்றால் என்ன? எல்லாவற்றையும் குறுகிய மனப்பான்மை இல்லாமல், உயர்ந்த கண்ணோட்டத்துடன் பார்ப்பது. எல்லாம் சரியாகத்தான் உள்ளது. முதலில் நாம் நம்மை சரி செய்து கொள்வோம்.

**Buddies**
Infotech Pvt Ltd

OUR SOLUTIONS

- WEB DEVELOPMENT
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- MOBILE SOLUTIONS

Buddies Infotech Pvt Ltd
KG Marina Bay,No.75 & 77, Ground Floor
Santhome High Road,Santhome
Chennai 600 004
Phone: +91-44-43033313

**E-mail:** contact@buddiesinfotech.com

# ஞானம் ஏன் வரவில்லை?

– ராமுஜி

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். எதிர்பாராத விதமாக எதிரி நாட்டு படைகள் தாக்க ஆரம்பித்தன. ராஜாவால் சமாளிக்க முடியவில்லை. நிறைமாத கர்ப்பிணியான தன் மனைவியை உடன் அழைத்து கொண்டு ராஜா தப்பி ஓடினான். அடர்ந்த காடுகள் வழியே அவர்கள் போகும்பொழுது, ராணிக்கு பிரசவ வலி ஏற்பட்டு, ஒரு ஆண் மகவை பெற்றெடுத்தாள். தாங்கள் எதிரிகளிடம் சிக்க நேரிட்டால், பிஞ்சு குழந்தையான தங்களுடைய வாரிசும் சிக்க நேரிடும். அதனால் அங்குள்ள காட்டு வாசிகளிடம், குழந்தையை ஒப்படைத்து விட்டு, ராணியும் அரசனும் ஓடினார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடியே, எதிரிகளிடம் சிக்குண்டு மாண்டார்கள். வேடுவர்களில் ஒருவனாகவே வளர்ந்தான் அரசகுமாரன். அவர்களை போலவே நடை, உடை, மொழி எல்லாவற்றையும் பின்பற்றி வந்தான். வயதான அந்த வேடுவகுலத் தலைவன் மரிக்கும் தருவாயில், அந்த ராஜகுமாரனை அழைத்து, நடந்ததை எல்லாம் விவரமாக சொல்லி விட்டு மரித்தான். “இப்பொழுது வேடுவ சிறுவன் அரசகுமாரனாக மாறவில்லை. அரசகுமாரன், தான் அரசகுமாரன், என்பதை

> *“நீங்கள் சொல்லும் ராஜகுமாரன் நான்தான் என்று வைத்து கொள்ளுங்கள். வேடுவ தலைவன் நீதான் ராஜகுமாரன், என்று நடந்ததை எல்லாம் விவரமாக எடுத்துரைத்த போதிலும், நான் என்னை ராஜகுமாரனாக உணரவில்லையே; என்ன காரணம்” என்றான் சீடன்.*



அறியாததால், தன்னை வேடுவ சிறுவன் என்று எண்ணியிருந்தான். அதுபோல்தான் நீ ப்ரும்மமாக ஆக வேண்டியதில்லை. நீ ப்ரும்மமாகவே உள்ளாய்; அஞ்ஞானத்தால் உன்னை சரீரமாக நினைத்துள்ளாய்" என்றார் குரு.

குரு இந்த உபநிஷத் கதையை, தன்னுடைய சீடனிடம் சொல்லி, "ஆகவே நீ சரீரம் இல்லை; பிரும்மமாகவே உள்ளாய்" என்றார். இதை கேட்ட சீடன், "நீங்கள் சொல்லும் ராஜகுமாரன் நான்தான் என்று வைத்து கொள்ளுங்கள். வேடுவ தலைவன் நீதான் ராஜகுமாரன், என்று நடந்ததை எல்லாம் விவரமாக எடுத்துரைத்த போதிலும், நான் என்னை ராஜகுமாரனாக உணரவில்லையே" என்ன காரணம் என்றான். அந்த குரு, அவனுக்கு சளைத்தவர் இல்லை. "நீ புத்தி ஸ்வாதீனமில்லாத ராஜகுமாரன் அதுதான் காரணம்" என்று ஒரே போடு போட்டார்.

WE HANDLE ALL TRAVEL RELATED SERVICES

1. DOMESTIC INTERNATIONAL AIR TICKETING
2. VISAS / PASSPORT
3. INSURANCE
4. FOREIGN EXCHANGE
5. HOTEL RESERVATION & RENT A CAR SERVICES
6. OUTBOUND & INBOUND TOUR PACKAGE

PL CONTACT

**EURO WORLD TRAVEL PVT. LTD**

26, FIRST FLOOR, C.P.RAMASWAMY ROAD, ALWARPET,
CHENNAI - 600018. Ph - 9382846979 Ph- 24661228/29, 24671228/29,
24993609/4629 Email - eurotravel@vsnl.net/euroworldtravel@gmail.com

## *சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**செப்டம்பர் 5ஆம் தேதி**யன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில் மிக விசேஷமாக ராதாஷ்டமி ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் கொண்டாடப்பட்டது.

**செப்டம்பர் 12ஆம் தேதி**யன்று கோவிந்தபுரம் சைதன்ய குடீரத்தில் ஆண்டு விழா நகரசங்கீர்த்தனத்துடன் மிக சிறப்பாக நடந்தது.

**செப்டம்பர் 3ஆம் தேதி**யன்று பெங்களூரில் சுமார் நூறு பள்ளிகளை சேர்ந்த மாணவமணிகளுக்கான "**புரா-நவா**" போட்டி, பாரதீயவித்யா பவன் பள்ளி ஆடிட்டோரியத்தில் மிக அருமையாக நடந்தது. இதில் பாகவதம், ராமாயணம், பாரதத்தை சேர்ந்த மஹான்களின் சரிதங்கள் ஆகியன குறித்து அமைந்திருந்த போட்டியில் 80மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் சென்னையை சேர்ந்த எம்.கே.ராமானுஜம்ஜி மற்றும் ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்டின் பிரின்சிபால் ஸ்ரீபாலாஜியும் நடுவர்களாக இருந்தனர். இப்போட்டி பலவிதத்திலும் பெங்களூர் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடியை சேர்ந்த அன்பர்களால் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தது.

**செப்டம்பர் 14, 15 தேதிகளில் பாலக்கோடு நாமத்வாரை** சுற்றி பல இடங்களில் ராமானுஜம்ஜி மற்றும் கிரிஜி சத்சங்கங்களை நடத்தி வந்தனர். செப்டம்பர் 21 அன்று ராமுஜி மற்றும் வாசுஜி பாலக்கோடு அருகில் உள்ள ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி வேதபாடசாலையில் வித்யார்த்திகள் மத்தியில் ஒரு சத்சங்கம் செய்து வந்தனர். செப்டம்பர் 22 , 23 தேதிகளில் பாலக்கோடு பாரதியவித்யா பவன் மற்றும் நூரணி பள்ளி





மாணவர்கள் முன் தேர்வுகளை சுலபமாக எதிர்கொள்ளும் முறை குறித்து ராமுஜி பேசினார். பாலக்கோடு நாமத்வாரிலும்



அருகில் பல இடங்களிலும் ராமுஜி, ஸ்ரீஸ்வாமிஜியின் "கலியை பலி கொள்ளும்" மஹாமந்திரகீர்த்தனையை மையமாக வைத்து, சத்சங்கங்களை நடத்தினார். 24ஆம் தேதியன்று மனவலிமை பெறும் விதம் குறித்து ஒரு நிகழ்ச்சியை பாலக்கோடு ராமநாதன் ஹாலில் ராமுஜி நிகழ்த்தினார். 25ஆம் தேதி ஒரு நகர சங்கீர்த்தனம் நடைபெற்றது. அன்று மாலை கோயம்புத்தூரில் ஸ்ரீஸ்வாமிஜி திறந்து வைத்த, ஸ்ரீஅபிநவவித்யாதீர்த்தர் பிரவசன மண்டபத்தில் ஒரு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை நிகழ்த்தினார். இதில் சுமார் 300 அன்பர்கள் கலந்து கொண்டு, மிகவும் பயனுற்றனர்.

**செப்டம்பர் 11** அன்று மஹாரண்யம் கிராமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் ஒரு கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்று மணிமங்கலத்தை அடுத்த சேத்துப்பட்டு கிராமத்தில் காலை 6முதல் மாலை 6வரை **அகண்ட மஹாமந்திர கீர்த்தனம்** நடைபெற்றது.

## *ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்*

*- ஜனனி*

## தன்வந்தீ பாயி - 7

பாயிஜியிடம் பாபா, "பரிக்ரமா வழியில் கிரிராஜனின் தரிசனத்தைப் பற்றி நீ கூறவில்லையே?" என்றார். உடனே, பாயிஜியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. பாபாவின் சரணங்களில் வீழ்ந்து பாயிஜி குலுங்கி குலுங்கி அழத் தொடங்கினார். பாபாவின் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகியது. அவர் பாயிஜியின் தலை மீது கை வைத்தபடி, "மகளே! நீ தன்யம் ஆனாய்" என்றார்.

சிறிது நேரம் சென்ற பின், பாயிஜி ஸமாதானம் அடைந்தார். அப்பொழுது பாபா, "இது ஒன்றும் ஆச்சரியமான விஷயமில்லை. பகவானின் அப்ராக்ருதமான லீலைகளை த்யானம் செய்து, ஸாதகனின் மனம், ப்ராணன் எல்லாமே அப்ராக்ருதமாகி விடுகின்றன. அக்னியில் ஒரு பதார்த்தத்தை போட்டால், அதுவும் அக்னியாவது போல்தான் இது. அப்பொழுது அப்ராக்ருதமான கண்களால், பகவானின் அப்ராக்ருதமான லீலைகளின் தரிசனம் எற்படுகிறது" என்று கூறினார்.

ப்ரேமமாதுரீ பாயிஜி, எல்லா ஸம்ப்ரதாயத்தின் மஹான்களையும் க்ரந்தங்களையும் ஆதரிப்பார். அதனால், எல்லா ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த மஹான்களும் அவரிடம் வருவார்கள். அவர்களுடைய ஸங்கத்தினாலும், எல்லா க்ரந்தங்களின் அத்யயனத்தினாலும் பாயிஜிக்கு ராதாராணியிடம் அனன்யமான நிஷ்டை ஏற்பட்டது. அவர் ஸஹசரீ பாவத்தில் மனதாலும் உடம்பாலும் ஸேவையில் ஈடுபடலானார். இந்த ஸஹசரீ பாவத்திற்கு ப்ரேமஸரோவர் எனும் இடத்தின் ஏகாந்தமும் அழகும், ஏற்றதாக அமையும் என அவர் எண்ணினார்.

அதனால் அங்கிருந்து பஜனை செய்யும் பொருட்டு ஸ்ரீமதீசரண்ஜீயுடன் அவர் அங்கே சென்றார். பதினோரு

வருடங்கள் அங்கிருந்தபடியே, அவர் பஜனை செய்தார். அச்சமயம் அங்கு ஸ்ரீப்ரியாசரண் பாபாவும் தங்கி வந்தார். அவருடனும் பாயிஜி ஸத்ஸங்கம் செய்வார். இந்த இடத்தில் அவரது சுத்த ஸஹசரி பாவத்தில் ஈடுபாடு மிகவும் அதிகமாயிற்று. ராதாராணியின் க்ருபை இப்பொழுது முன்பை விட அதிகமாயிற்று. பாயிஜிக்கு அவ்வப்பொழுது சில திவ்ய லீலைகளின் தரிசனம் ஏற்படும். ஒரு முறை விடியற்காலை, ப்ரேமஸரோவரில் ஸ்நானம் செய்ய சென்ற போது, மறுகரையில், ஒரு திவ்ய ப்ரகாசத்தையும், ஒரு மயில் ஆடுவதையும் அவர் கண்டார். ஸ்ரீமதீசரண்ஜியுடன், மறுகரைக்குச் சென்று பார்த்தால் அங்கு ஒன்றுமேயில்லை.

இரவு நேரம் அதேபோல் ஒரு ஒளி ஏரியின் அருகில் அவருக்கு மீண்டும் தெரிந்தது. மதுரமான ராகத்துடன், ராஸ நடனத்தின் ஒலியும் பாயிஜிக்கு கேட்டது. ஆனால் ஒன்றுமே கண்ணிற்கு புலப்படவில்லை. இந்த ஒலி வரும் இடத்தைத் தேடி தேடி, அவர் காட்டில் அலைந்தார். இருந்தாலும் ஒன்றுமே தெரியவில்லை. பாயிஜி ராதாராணியிடம் துக்கத்துடன் முறையிட்டார், “ஸ்வாமினி! இவ்வளவு க்ருபை செய்தாலும் ஏன் என் கண்களுக்கு தெரியமாட்டேன் என்கின்றாய்? இந்த கண்ணாமூச்சி விளையாட்டு உனக்கு நன்றாக இருக்கிறதா? இதனால் நான் அடையும் வேதனையை நீ அறிய மாட்டாயா?” இவ்வாறு இரவு முழுவதும் புலம்பினார் பாயிஜி. காலை ஒரு சிறிய பெண் பாயிஜி அருகில் வந்து, ஒரு பழத்தையளித்து, “பார்! இந்த பழம் எவ்வளவு இனிமையாக இருக்கிறது என்று!” என்று கூறி பார்த்து கொண்டிருக்கும்போதே மறைந்துபோனாள். இது மாதிரி மறைமுகமாக ராதாராணியின் க்ருபையைப் பெற்று தன்யமானார்.

பதினாறு வருடங்கள் சென்ற பின், குருபாயி மற்றும் சகோதரிகளின் வற்புறுத்தலால் பாயிஜி, மீண்டும் ப்ருந்தாவனத்தில் ஸுகபவனத்தில் வஸிக்கலானார். அங்கு சென்றவுடன் ஒரு ஸப்தாஹத்திற்கு ஏற்பாடு செய்தார். கடைசி தினம் 100

வைஷ்ணவர்களுக்கு ததீயாராதனம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அவர்களுக்கு அன்னம் இட்டு கொண்டிருந்தபோதே நந்தக்ராம், பர்ஸானா, ஜெய்பூர் ஆகிய இடத்திலிருந்து மேலும் 100 வைஷ்ணவர்கள் வந்துவிட்டார்கள். ஸ்ரீமதீசரண்ஜி பயந்துபோய், பாயிஜியிடம், "இப்பொழுது என்னவாகும்? ப்ராஸாதம் சிறிதே உள்ளது. வைஷ்ணவர்களோ, நிறைய பேர் வந்துவிட்டார்களே! என்று கவலையுடன் கேட்டார். அவரை கோபித்து பாயிஜி, உன்னுடைய புத்தியின் ஜடத்தன்மை இன்னும் போகவில்லையே! பகவத் ப்ரஸாதம் பகவானை போல் சின்மயமானதும், மஹத்தானதும் என்பதை நீ அறியமாட்டாயா? பின் என்ன கவலை? என்று கூறினார். அவர் கூறியது போல், எல்லோரும் வயிறார உண்ட பின்பும் ப்ரஸாதம் மிச்சம் இருந்தது.

ப்ரேமமாதுரீ பாயிஜி, பெருமைகளிலிருந்தும் புகழிலிருந்தும் விலகியே இருக்க விரும்பினார். ஒரு முறை ஒரு பக்தர், பாயிஜியின் பிறந்த நாளை ஒட்டி, வாழ்த்து மடல் ஒன்றை எழுத திட்டமிட்டார். அவர் பாயிஜியிடம் இதைப் பற்றி ஒன்றும் கூறாத போதும், அவரது எண்ண ஓட்டத்தையறிந்த பாயிஜி, அவரிடம், நான் உயிருடன் இருக்கும் வரை என்னைப் பற்றி எதுவும் எழுத வேண்டாம் என்று கூறிவிட்டார்.

சில காலத்திற்கு பின் பாயிஜி நோய் வாய்ப்பட்டார். ஸ்ரீமதீசரண்ஜீ அவரது ஸேவையில் ஈடுபட்டார். ஒரு நாள் பாயிஜி அவரிடம் என்னை ஸ்ரீஜியின்(ராதாராணி) முன் அழைத்துச் செல் என்று கூறினார். ராதாராணி இருந்த அந்த அறைக்கு பாயிஜி அழைத்துச் செல்லப்பட்டார். ஸ்ரீஜியை தரிசனம் செய்த பின், பாயிஜி தன் அறைக்குத் திரும்பினார். அப்பொழுது, அவர் முகத்தில் அபூர்வமான ஒரு ஒளி தென்பட்டது. அது முழுவதுமாக விரிந்த தாமரை போன்று மலர்ந்து இருந்தது. பாவனையில் அவர் ஸஹசரி ஸ்வரூபத்தில் நிலை பெற்றிருந்தார். சிறிது நேரத்திற்குப் பின், அவர் அதே ஸ்வரூபத்தில், ஸ்ரீஜியிடம் நிகுஞ்ஜத்தை சென்றடைந்தார்.

(தொடரும்)

## *மாலே மணிவண்ணா –100*

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

மூலப்பகுதி என்பது தத்துவங்களில் "மான்" என குறிக்கப்படுகிறது. சைவ சித்தாந்தத்தில் விந்து, மோகினி, மான் என்று மூன்று மாயைகள் குறிப்பிடப்படும். இவற்றை சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என்றும் குறிப்பிடுவர். முப்பத்தாறு தத்துவங்கள் கொண்ட சைவ தத்துவம், சுத்த தத்துவம் என்ற ஐந்தும் சுத்த மாயையிலிருந்தும், வித்தியா தத்துவங்கள் என்ற ஏழும் அசுத்த மாயையிலிருந்தும் தோன்றியன என்று கொள்ளும். கீழ் உள்ள ஆன்ம தத்துவம் 24ம் பிரகிருதி மாயையின் காரியங்கள் என கூற பெறும்.

வைணவத்தில் இருபத்து நான்கு தத்துவங்களுக்கு மேல் தத்துவ கோட்பாடு இல்லையாதலின், மூலப்பகுதியில் அனைத்தும் அடங்கியது. "மூலமும் அறனும்" என்ற பரிபாடல் தொடர் இதனை குறித்து நின்றது.

இனி, மூலப்பகுதியாவது சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் குணங்கள் மூன்றும், அவ்யக்தமாய் ஒத்திருக்கும் நிலை ஆதலின், அதனை கூறவே, இன்ப துன்பங்கள், அறிவு, அறியாமை என்னும் உயிர் குணங்களும் சொல்லப்பட்டன என்பது, பரிமேலழகர் தரும் விளக்கம். "வருங்குண வடிவாய் மூல பிரகிருதி" என்று சைவசித்தாந்த சாத்திரமாகிய சிவஞான சித்தியார் கூறுவதும் இங்கு நினைத்தற்குரியது.

"நின் மருங்கின்று மூவேழ் உலகமும்" என்று கூறிய அதனால், இம்மூவேழ் உலகத்து உயிர்கள் எல்லாம் நின்னிடத்த ஆயின. எனவே உன்னை பிரிந்து எதுவும் இல்லை என்று, அவன் எல்லாமாக நிற்கின்ற நிலையை, எடுத்து உரைத்தார். அவ்வுயிர்களின் பொருட்டு, ஒன்றாகவும் எல்லாமாகவும் இருக்கின்ற ஒருவனே அறிதுயிலோனாகிய திருமாலாகவும்,

நாஞ்சிலோன் ஆகிய பலராமனாகியும், ஆதிவராகமாகவும் விளங்குகின்றான். அதுவேயும் அல்லாமல், தன்னிடத்தே பிரிந்த மும்மூர்த்திகளாகவும் விளங்கும் ஒருவனும் ஆக இருக்கின்றான் எனும் பரம்பொருள் தத்துவத்தை, விளக்கி நிற்கிறது 27 முதல் 37 வரை உள்ள செய்யுள் அடிகள். அவற்றின் விளக்கத்தை இனி காண்போம்.

விஷ்ணு சஹஸ்ர நாமத்தில் “விஸ்வாத்மா” என்று ஒரு திருநாமம் வரும். இயங்கியற்பொருள், நிலையியற்பொருள் சரம், அசரம் எனப்படும் எல்லா உயிரினத்திற்கும் ஆத்மாவாக, உலகம் எனப் பலவாறாக தோன்றுவதனைத்திற்கும் நிலைக்களனாக உள்ளவர் என்பது, இத்திருநாமத்தின் பொருள். இதனையே இதுவரை அறிந்தோம். பகவானின் நிலையை கம்பநாட்டாழ்வாரும் பரிபாடலும் சொல்வதை மேற்கொண்டு பார்க்கலாம்.

(தொடரும்)

rb rajmani builders

launches its new project

"rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

website: www.rajmanibuilders.com

## அப்பாலுக்கு அப்பால்

## சித்தாராமர் -1

அல்லமர் தடுத்தாட்கொண்டவர்களில் மிக சிறந்தவர் சித்த ராமேஸ்வர். சிவபிரானிடம் அளவு கடந்த பக்தியுடன் திகழ்ந்தவர் இவர். அல்லமர் இவரை சந்திப்பதற்கு முன்பாகவே, நேருக்கு நேராக சிவபிரானின் தரிசனம் பெற்றவர். சிவனின் ஆக்ஞைப்படி வாழ்ந்து வந்த இவரை, பக்தியின் உச்ச நிலைகளுக்கு இட்டு செல்லவே அல்லமர் இவரை தன்னுடன் சேர்த்து கொண்டார்.

இன்றைய ஷோலாப்பூர்தான் சொனாலிகே. இதில் முத்துகௌட-சுகவீ என்ற தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் ரேவண சித்தர் என்ற மகாத்மா இருந்தார். பதினொன்றாம் நூற்றாண்டை சேர்ந்த இந்த ரேவண சித்தர் வாரங்கல் அருகே உள்ள சோமேஸ்வரருடன் இரண்டற கலந்ததாக நம்பப்படுகிறது. தத்த வம்சத்தில் வந்தவரான இவரின் பெயரில் வேறு ஒரு பெரியாரும் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர் பல நூற்றாண்டுகள் முந்தியவர். அவரது சரித்திரம் இவருடையதுடன் கலந்து பேசப்படுகிறது என்றாலும், இருவரும் வேறு வேறான மஹாத்மாக்களே. இந்த ரேவண சித்தர், யாத்திரையாக பல இடங்களுக்கும் சென்று வருகையில், ஒரு முறை ஷோலாப்பூருக்கும் வந்தார். பல்லக்கில் வந்த அவர் நேராக இந்த முத்துகௌடரின் வீட்டிற்கு வந்தார். அவரது மனைவியை பார்த்து, "நீ ஒரு பெரிய மகாத்மாவை புத்திரனாக பெறுவாய்" என்று ஆசீர்வதித்து சென்றார். அவர்களுக்கு சில நாட்கள் கழித்து பிறந்தவர்தான் சித்தராமர்.

மருதாநல்லூர் சத்குரு ஸ்வாமிகள் பிறந்தபின் எப்படி பலகாலம் பேசவில்லையோ, அப்படியே இந்த பாலகனும் பேசவே இல்லை. மேலும் தாய்ப்பால் கூட குடிக்காமல் இருந்தான். குழந்தையாய் இருக்கையிலேயே இவருக்கு யோகம் கைவரபெற்று இருந்தது என்பர். பெற்றோர்கள் ரேவண சித்தர் சொல்லியதன் பேரில் சீராட்டி வளர்த்தாலும் வாய் பேசாதிருந்தமையால், உள்ளம் கலங்கினர். சிறிது வயதானபின், இவர் தினமும் மாடு மேய்க்க செல்ல

ஆரம்பித்தார். அப்பொழுது வயல்வெளிகளில் இருந்த ஒரு சிவலிங்கத்தை பூஜித்து வரும் பழக்கம் கொண்டிருந்தார். அப்படி ஒருமுறை போனபொழுது சிவபிரான் இவர் முன் தோன்றினார். அப்படி வந்தவர் ஸ்ரீ சைலத்தில் விளங்கும் மல்லிகார்ஜுனர்தான். சந்திரனும் கங்கையும் தலையில் இலங்க, கழுத்தில் நாகமும் ருத்திராக்ஷமும் இருக்க, ஒரு கை சூலமும் மற்றொரு கை உடுக்கையும் ஏந்தி இருக்க, அரையில் புலித்தோலாடை பொன் போல் ஒளிர, அக்னி ஒருகையிலும் மான் ஒரு கையிலுமாக ரிஷபத்தின் மேல் ஒருகணம் தோன்றிய பிரான், மறுகணம் ஒரு சிவகுருவாக மாறி, சிறுவன் முன் நின்று அவனை பார்த்து புன்னகைத்தார். அவர் யாரென வினவினான் சிறுவன்.

தன் பெயர் மல்லிநாதன் என்றும், தாம் ஸ்ரீசைலத்தில் இருப்பதாகவும் சொன்னார் அந்த குரு. தன்னிடம் இருந்த சோளத்தில் பக்குவம் செய்யப்பட்ட இனிப்பு உணவை அவருக்கு கொடுத்தான் சிறுவன். குரு கொஞ்சம் கஞ்சியும் மோரும் கேட்டார். அதை கொண்டு வருவதற்காக வீட்டிற்கு சென்றான் சிறுவன். திரும்பி வந்து பார்த்தால் குருவை காணவில்லை. அந்த குருவை பார்த்ததிலிருந்து அதிசயமாக ஆனந்தத்தில் திளைத்திருந்த சிறுவன், குருவை காணவில்லை என்றவுடன் தவித்தான்.

“மல்லிநாதன், ஸ்ரீசைலம்” என்றே சொல்லிக்கொண்டிருந்தான் சிறுவன். ஸ்ரீசைலம் எல்லாருக்கும் தெரிந்ததுதானே? சிறுவன் கோவிலுக்கு செல்ல ஆசைப்படுகிறான் என்று நினைத்து, ஒரு யாத்திரீகர் குழு சித்தாராமனை ஸ்ரீ சைலத்திற்கு இட்டு வந்து அங்கு இருக்கும் லிங்கத்தையும் தரிசனம் செய்து வைத்தது. அதை பார்த்து சிறுவன் சந்தோஷப்படவே இல்லை. மாறாக மேலும் வருத்தம் பொங்கி அழுதான். கர்ப்பத்தில் கிருஷ்ணனைப் பார்த்த பரிக்ஷீத், எப்படி மறுபடி அவனையே பார்க்கும் வரையில் எவரையும் ஏற்கவில்லையோ, அப்படியே சிறுவனான சித்தாராமன் தனக்கு குருவாக வந்தவர் இந்த லிங்கம் இல்லை என்று கூறி அழுதான். எவ்வளவு சமாதானம் செய்தும் இந்த அழுகை நிற்கவில்லை.

(தொடரும்

மதுரமுரளி சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு அணுகவும்:

PH: +91-44-24895875

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| அக்டோபர் 6 | விஜயதசமி - புரட்டாசி சிரவணம், ஸ்ரீனிவாசபெருமாள் அவதார தினம் |
| அக்டோபர் 14-16 | மருதாநல்லூர் |
| அக்டோபர் 23 | வைதீகஸ்ரீ ஆண்டு விழா, மேல மாம்பலம் |
| அக்டோபர் 27 | ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரம் |
| நவம்பர் 3 | கோபாஷ்டமி |
| நவம்பர் 7 | வள்ளிபுரம்-செங்கல்பட்டு சமீபம்- ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேகம் |
| ஏகாதசி | அக்டோபர் 7 , 23 நவம்பர் 6, 21 |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.